உ

சிவமயம்



மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம் போக்கட்டி
கொடிகாமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும்
ஓய்வுபெற்ற உபதபாலதிபரும் பிரபல சமய சமூகத் தொண்டருமான
உயர்திரு.வைத்திலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியுமான

# திருவாட்டி இராசலட்சுமி

அவர்கள் இறைவனடி சேர்ந்தமை குறித்த

# நினைவு மலர் (இராஜதீபம்)

**03.11.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற உபதபாலதிபரும் பிரபல சமய சமூகத்தொண்டருமான உயர்திரு.வைத்திலிங்கம் அவர்களின் பாசமிகு

துணைவியுமான திருவாட்டி

அமரர்

**இராசலட்சுமி** அவர்கள்

இறைவனடி சேர்ந்தமை குறித்த

நினைவுமலர் (இராஜதீபம்)

**03.11.2012.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயத் தெய்வத்திற்குச்

சமர்ப்பிக்கின்றோம்

அன்புடன் அறத்தை ஊட்டி

அத்துடன் வாழ்வழியும் காட்டி

அறுசுவை உணவு மூட்டி

அகிலத்தில் உயர்வை ஏற்றி

மண்ணகம் மறந்து போன

அன்னையே! அருமருந்தே!

விண்ணக வாழ்வில் நின்று

விரும்பிய சாந்தி பெற்று

நீடு நீவாழ்ந்து கொள்ள

இம்மலரதை இசை வாயின்று

சமர்ப்பித்தோம் ஏற்றருளும்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"எங்கள் குடும்ப ஒளிவிளக்கு"



அன்னை மடியில்
28*10*1934

ஆண்டவன் அடியில்
04*10*2012

அமரர்

# இராசலட்சுமி வைத்திலிங்கம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

நந்தனத்தில் வந்துதித்த புரட்டாதி மாதமதில்
வந்ததொரு சதுர்த்ததி நல்அபரபக்கம் ~ எங்கள்
இராசலட்சுமியென்னும் இனியவளாம் இறைமகளாம்
ஈசன் தாளடைந்த தினமின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாக்கள்



## விநாயகர் துதி

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலம்
ஞானகுரு வாணிபதம் நாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்திளம் பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

நிரைகழலரவம் சிலம் பொலியலம்பும்
நிமல நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றி
குரைகடலோத நித்திலம் கொழிக்கும்
கோணமா மலைய மர்ந்தாரே!

## திருவாசகம்

பாரோடு விண்ணாய் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உரைப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரலோக்கிய சுந்தரனே!

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊருமுலகும் களறி உளறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எழுதி முற்றுற
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
றுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

## கச்சாய் நரசிங்க வைரவரை வேண்டல்

பூவுமே துளசி மலர்மாலை அணிமார்பனே
பூமலட்சுமி நாயகா
புங்கவர்கள் அடிவரவு போதே கணேசனே
உன்புதுவை தந்தெம்மை ஆழ்வாய்
நாமேவு இரணியனை பிளக்கவே நரசிங்க ரூபமானாய்
நன்மை பெறவே உதவிபுரிய நற்கனிகொடுத்த முதல்வா
வள்ளி மணவாளனுடைய மாயனே ஆயனே
மாட்டிடையர் புதல்வனே – எம்மனத்துயர் அகற்றியருள்வாய்
காமேவு கச்சாய் குழப்பதில் உறைகின்ற கண்ணகை
வலப்பக்கம் கருணையுடன் உறைகின்ற அரியதொரு
பெரிய ஆதி நரசிங்க வைரவ தேவனே!

## குலதெய்வம் நரசிங்கருக்கு வேண்டுதல்

அடியவர்க் குறைகள் போக்க
அம்மனுக் கயலிருந்து
அருள் மழை பொழியு மெங்கள்
நரசிங்கக் கடவுளரே
கொடிய நோய் துன்ப மெல்லாம்
கூடவே அழித்தொழித்து
அனைவரைக் காக்கும் எங்கள்
நரசிங்கக் கடவுளரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமும் உன்கோயில் நாடி
நின்னையே தேடிப் பாடி
சித்தமே உருகி நிற்கும்
சிறப்புடை பக்தை அவள்
இராசலட்சுமி யெனும்
இகத்தினில் இனியவளே
நேசமாய் உன்னுலகு வந்தாள்
நிறைவுடன் காத்திடைய்யா!

## ஆசிரியப்பா [வாழ்க்கை வழிவம்]

ஈழ நன்னாடாம் இலங்கைத் தீவினில்
ஞாலம் புகழுடை நலங்கள்சேர் தீவினில்
தொன்மையும் வண்மையும் கொண்டதோர் பதியாம்
தென்மராட்சியெனும் தேன் தமிழ்ப் பகுதியாம்.

அப்பகுதிதனில் அழகுடை ஓர் நிலம்
செப்புடைவல்ல செழுமை சேர் ஓர்நிலம்
மாவும் பலாவும் வனப்புறு பயிர்களும்
தாவும் கொடிகளும் தானியப் பயிர்களும்
கண்ணியர் கவிஞர் கற்றவர் வாழ்ஊர்
புண்ணியர் புகழுடையார் பலர் வாழ்ஊர்
மீசாலை எனப்புகழ் கொண்டதோர் பேரூர்.

நற்புகழ் பெயரோடு இப்பதி தனிலே
நற்குல உயர் மகன் வல்லிபுரமவன்
சித்தமிசைந்திடச் சிறப்புறு வாழ்வில்
முத்துப்பிள்ளையுடன் இல்லற வாழ்வில்
இணைந்து வாழ்ந்திட இனிமைகள் நாடிட
நனைந்து மகிழ்ச்சியில் நலங்களும் தேடிட.

ஆறுமுகன் எழிலொடு ஆறுமுகமும்
அவனொடு தங்கை இராசலட்சுமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலமுடன் செல்லத்துரையும்
நடராசாவுடன் ஐந்து பிள்ளைகள்
புத்திரச் செல்வமாய் புவிதனிற் பிறக்க
சித்தம் குளிர்ந்துமே மகிழ்ச்சியிற் பறக்க
பெற்றவர் மகிழ்ச்சியில் மாண்பினில் மலர்ந்தனர்
மற்றவர் புகழ்ந்திட மக்களும் வளர்ந்தனர்.

அண்ணன் நான்கிற்கு ஆசையாய் ஓர் தங்கை
பொன்னெனப் போற்றிக் காத்தனர் நங்கையை
இராச மகளென இராசலட்சுமியும்
இராச போகமாய் வளர்ந்திட அவளும்
பள்ளிக் கனுப்பிக் கல்வியைக் கற்றிட
சொல்லிடும் அறநெறி அனைத்தும் பெற்றிட
விக்னேஸ்வரா எனும் பள்ளிக்குச் சென்று
விக்கினமின்றிக் கல்வியை வென்று
செல்லமகளாய் சீருடன் சிறப்புடன்
நல்லதோர் மகளாய் மாண்புடன் மகிழ்வுடன்
இராசலட்சுமி இனிதாய் மலர்ந்தனள்
பாசமகளாய் பாங்குடன் வளர்ந்தனள்.

பொன்னரும் மேனி பொலிவுறு முகமது
அன்னவள் அழகுடை அன்புடை அகமது
செல்லவாக்குக் கண்களிற் தெரிந்திடும்
சொல்வாக்கதுவென அனைவர்க்கும் புரிந்திடும்
பண்புடை பேச்சு பார்ப்பவர் வியக்க
அன்புடன் பழகும் பாங்கோ மயக்க
தெய்வபக்தியும் தெளிந்தநற் சிந்தையும்
தையலாள் அவளின் பண்புகள் விந்தையாம்.

எத்தனை மாண்புகள் எத்தனை பெருமையை
அத்தனையறிந்தனன் அவளின் அருமையை
வெள்ளாங்குலமவன் வெகுவாய்ப்ப படித்தவன்
வெள்ளாம் போக்கட்டி ஊரில் வாழ்ந்தவன்
வைத்திலிங்கம் எனும் பெயரைக் கொண்டவன்
வைத்திலிங்கமவன் மாட்சிகள் கண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவன் அன்றோ இராசலட்சுமிக்கு
கண் அவனாக வந்திட வேண்டும்
என்று அவன் எழுதிய எழுத்தோ எதுவோ
அன்றவன் அழகுடை வைத்திலிங்கமவன்
இல்லற வாழ்வினில் இராசலட்சுமியை
நல்லறத் துணைவியாய் ஆக்கிட அவளை
இசைந்துமே இணைத்துத் தாலியை ஏற்ற
விசைந்தது வாழ்க்கை ஊரது போற்ற.

வள்ளுவன் வாசுகியாய் அவரிணைந்து
தெள்ளு தமிழ்நெறி வாழ்வினில் நனைந்து
வாழ்ந்திட ஆங்கே வளம்பல ஆங்கே
சூழ்ந்திட ஆங்கே நலம்பல பாங்கே!
புத்திரச் செல்வமே புவிதனில் அரியது
நித்தில வாழ்வினில் நிறைவுகள் தருவது
நம்பிய தெய்வம் நரசிங்கக் கடவுள்
கும்பிட்ட அவர்க்கு அளித்திடக் கடவுள்.

கலாவதியென்றொரு கலை வடிவானவள்
நிலாஎழில் மகளாய் நிலமிசை பிறந்தனள்
மூத்தவளவளே முத்தென விளங்க
காத்தனர் பெற்றோர் கருத்துடன் துலங்க
கேத்திரபாலன் என்றொரு செல்வமும்
புத்திரனாகப் புகழுடன் செல்வமும்
யோகம் கொண்டதாய் யோகபாலனும்
சிவமகன் அவன்எனச் சிவபாலனு மாங்கே
நில்மிசை மீண்டும் எழிலுடன் புத்திரி
திலகவதி யெனத் திருமகள் புத்திரி
குகனின் அருளொடு குகபாலனும்
சிவமகனவனுடன் பகவதி அவளும்
ஜெயபாலன் என ஜெயமுடன் ஓர் மகன்
நயமுடன் பிறக்க நம்மண் சிறக்க
மக்கள் எண்மரும் மனங்களில் நிலைக்க
தக்கநற் சிறப்பென மற்றவர் மலைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வு குதூகலமா யாங்கே
இடும்பைகளின்றி வளர்ந்தது பாங்கே.

குலதெய்வமவர்களின் நரசிங்கர் அருளுடன்
நலமுடன் நால்வகை நயங்களும் பொருளுடன்
உத்தியோகமாம் உபதபாலதிபர்
சித்தியுடனே வைத்தியும் பெற்றிட
புகழுடன் பேருடன் பூரிப்பாயவர்
திகழ்ந்து வாழ்ந்தனர் திறமையாயவர்கள்.

மேடும் பள்ளமும் வாழ்க்கையில் நியதி
யாரும் விதிவிலக்காக நீதி
அன்னதிற்கிணங்க அவர்களின் வாழ்வில்
சின்னதோர் சோகம் சிறியதோர் தாழ்வு.

காலமும் வந்திடக் கணக்கதும் வந்திட
காலனும் வந்தான் கவர்ந்துயிர் எடுத்திட
யோகபாலன் என்றொரு புத்திரன்
குகபாலன் என்னும் மற்றொரு சித்திரன்
சின்னவயதிலே அந்தகன் யமனுடன்
சின்னவரிருவரும் சேர்ந்தனர் அவனுடன்
காலம் ஓடிடக் கவலைகள் பறந்தன
ஞால வாழ்வினில் மீண்டும் சிறந்தனர்.

புத்திரர் அறுவரும் சித்தியாய்ப் படித்து
முத்திரை பதித்தனர் கல்வியை முடித்து
உடல் நொந்திங்கே உழைத்திடல் முடியா
கடல் கடந்தாங்கே கல்விக்கேற்றதாய்
உழைப்புகள் பெற்று உயர்வுகள் உற்று
பிழைத்தனர் பிள்ளைகள் பலவழி கற்று
பேருடன் புகழுடன் பிள்ளைகள் வாழ்ந்திட
சீருடன் சிறப்பும் அனைவர்க்கும் சூழ்ந்திட
இராசலட்சுமி இனிதே வாழ்ந்தனள்
இராச போகமாய் இன்பத்தில் ஆழ்ந்தனள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை களவர்க்குத் திருமணம் முடிந்து
கிள்ளைகளவரின் கருமங்கள் முடித்து
கலாவதியவர்க்கு கல்யாணம் செய்து
பலகலை கற்றவன் பாங்குயர் பெற்றவன்
தங்கராசா எனும் தகுதிசேர் ஆண்மகன்
தங்க மகனாய்க் கிடைத்தனன் அவர்க்கு
கேத்திரபாலனுக்கு நிர்மலா என்றவள்
கோத்திரம் விளங்கக் குலமகள் வந்தனள்
குமுதாஞ்சனா என்னும் குலவிளக்கொன்று
சிவபாலனுக்கு சிறப்புறக் கிடைத்தது
திலகவதிக்கென யோகலிங்கமாம்
நலமுடன் வந்தனன் நல்லவன் ஒருவன்
பகவதி என்னும் பண்புடை மகளும்
புஷ்பகுமார் எனும் புகழுடையோனை
திருமணம் செய்திடக் காலமும் கனிந்திட
மறுமகன் கடைசியாய் கல்யாண வயதை
அடைந்திட்ட அன்னவன் ஜெயபாலனும்
அடைந்தனன் வசந்த நாயகியை வாழ்வினில்.

புத்திரர் அறுவரும் திருமணம் புரிந்து
சித்திரை நிலவாய் பிள்ளைகள் பெற்றிட
பேரரைக் கண்டனள் இராசலட்சுமி
தீரராம் அவரைத் திறமுடன் வளர்த்தனள்
பிஞ்சுகளின் குஞ்சுமொழியிடை மயங்கி
குஞ்சுகளில் நல்லழகினிற் கிறங்கி
மகிழ்ச்சியாய் வாழ்ந்தனள் மலர்ச்சியுடனே
நெகிழ்ச்சியாய் வாழ்ந்தனள் நெறி தவறாது.

இப்படி மகிழ்ச்சியாய் வாழ்வது ஓடிட
தற்போதுமில்லா தரணி வாழ்வோடிட
கட்டிய கணவனின் கணக்கிலாப் பாசம்
குட்டிகள் அனைவரின் அளவிலா நேசம்
பெட்டியில் பணமது போதுமே போதும்
நட்டுகள் நகை எல்லாம் என்றைக்கும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகளோ ஏதுமில்லை குறைசொல்ல ஒன்றுமில்லை
நிறைவான வாழ்க்கையது நிம்மதிக்குப் பஞ்சமில்லை.

இப்படித்தான் வாழ்ந்திட்ட எம்மவளுக்கந்தோ
எப்படியோ ஓர் துன்பமும் வந்ததுவோ அந்தோ
பாயிற்படுக்கவில்லை பலமிழந்து போகவில்லை
நோயிற் துவளவில்லை நொந்து துயர் காணவில்லை
நலமாகப்பேசி நலமாயே இருந்தவள் தான்
யார் கண்பட்டதுவோ யார்க்கெடுத் துரைப்போம் நாம்
பார் இழக்கப் பலனதும் வந்ததுவாம்.

சிறுநோயென்று கூறிச் சிறு நேரமாவதற்குள்
மறுஉலகின் வாயிலை மாண்புடையாள் போவதற்குள்
எல்லாம் முடிந்ததையோ எமன்வேலை முடிந்ததையோ
சொல்லாமற் கொள்ளாமல் நில்லாமற் பறந்திட்டாள்.

புருஷன் புலம்பியழ பிள்ளைகள் பதறியழ
உருகிநின்ற சோதரரும் உற்றாரும் சோர்ந்துஅழ
பிஞ்சுகள் பேரர்கள் பேதலித்து பெருத்துஅழ
குஞ்சுகள் எல்லோரும் குளறியழக் கதறியழ
மருமக்கள் மற்றவர்கள் மாய்ந்து மயங்கிய
பெறாமக்கள் பெருங்கவலைப்பட்டுச் சோர்ந்து அழ
பொட்டோடும் பூவோடும் பொன்னுலகு அடைந்திட்டாள்
நட்டோடும் நகையோடும் நரசிங்கரிடம் சேர்ந்திட்டாள்.

சென்றவள் சென்றதுதான் இனியென்ன ஏதுசெய்ய
வென்றவர் யாருள்ளார் மரணத்தை மண்ணினிலே
நாளைக்கு ஓலைவந்தால் நாமும் போய்விடுவோம்
வேளையது வந்திட்டால் போய்விடுவோம் போய்விடுவோம்
அதையுணர்ந்து நிற்போம் அமைதி கொண்டிருப்போம்
பொன்னவன் நரசிங்கரை சாந்தியே கேட்டிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்குமது வழியே நாம் போமளவும்
எமக்கென்ன என்று இட்டு உண்டிரும்.

ஓர் எட்டில் ஆடாத ஆட்டமும்
ஈரெட்டில் இல்லாத கல்வியும்
மூவெட்டில் ஆகாத திருமணமும்
நான்கெட்டில் பிறக்காத பிள்ளையும்
ஐந்தெட்டில் சேர்க்காத செல்வமும்
ஆறெட்டில் சுற்றாத ஊரும்
ஏழெட்டில் எடுக்காத ஓய்வும்
எட்டெட்டில் ஏற்படாத மரணமும் பயனற்றவை.

## கட்டிய கணவனின் முட்டிய கண்ணீர்த்திவலைகள்

இராசமே என்னுயிரே இராணியாய் வாழ்ந்தவளே
நேசமே பாசமுடன் பரிவுடன் வாழ்ந்தவளே
அன்பினால் ஆட்சி செய்து எந்தனை ஆண்டவளே!
பண்பினால் பதிவிரதைப்பட்டமும் கொண்டவளே!
அறுசுவை உணவளித்து அன்புடன் பார்த்தவளே!
வறுமையை அழித்து நல்ல வாழ்க்கையைச் சேர்த்தவளே!
நெஞ்சிலே வஞ்சமின்றி நேர்மையாய் வாழ்ந்தவளே!
குஞ்சு எம் குட்டிகளைக் குறைவின்றிப் பார்த்தவளே!
உற்றவர் உறவினர்க்கு உதவிகள் புரிந்தவளே!
மற்றவர் அனைவரையும் மதித்திடல் தெரிந்தவளே!
இன்று நீ எங்கு போனாய்? என்னவள் இராசமே சொல்
என்றினி உன்னைக்காண உத்தமி நீயே சொல்

மணவறை தனிலிருந்து மகிழ்வுடன் காத்திருக்க
மணமகளாக நீயும்வந்து மருண்டுமே பார்த்திருக்க
தாலியை ஏற்ற நீயும் தலைகுனிந்து வெட்கி நிற்க
வேலியாய் ஆன என்னை வெட்கமாய் கைபிடிக்க
நிலபாவாடைதனில் நீண்டதோர் ஊர்வலமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமகள் உன்னுடனே வந்ததை ஊர்வலமாய்
எண்ணிட நெஞ்சமின்று நெருப்பெனக் கொதிக்குதம்மா
புண்ணென ஆனதம்மா மனமது வலிக்குதம்மா

இனி என்ன நாங்கள் செய்ய இறைவனை நோகவேண்டாம்
தனிவழி சென்றவளே தனித்து நீர் வாழவேண்டாம்
விதியது கெதியே வந்தால் விரைந்து நான் வந்திடுவேன்
சதிபதியாக வாழ்வோம் சஞ்சலம் வேண்டாமம்மா.

## மூத்த மகள் கலாவதி (ஜேர்மனி) யின் கண்ணீர் வெள்ளம்

பல்லு விழக்கனவில்லை பாழ்ங்கிணறு இடியவில்லை
சொல்லும் வகையினில் ஓர் சொப்பனமும் காணவில்லை
கனவினிலும் கருதவில்லை காக்கையும் கரையவில்லை
நினைவினிலும் நினைக்கவில்லை சொல்லியழ வார்த்தையில்லை
மூத்த மகளென்று முத்தாக எனை வளர்த்து
காத்தவளே! கற்பகமே கண்ணாக எனை வளர்த்து
தாயவளே நீபோன செய்தி தாங்க முடியவில்லை
ஓயவில்லை உம்நினைவு உறங்கவோ முடியவில்லை
அம்மா என்னம்மா அமருலகு போனாலும்
இம்மாநில வாழ்வினிலே உனை மறக்கோம் ஆனாலும்
அமருலகு போய்விட்ட அம்மாவே என்றென்றும்
அமரருடன் அமரராகும் அஞ்சலித்தேன் அம்மாவே!

## ஆருயிர்ப்பிள்ளைகளின் (கேத்திரபாலன்–ஜேர்மனி), சிவபாலன்–கனடா, ஜெயபாலன்–சுவிஸ், திலகவதி,பகவதி) ஆற்றாமைக் கண்ணீர் வெள்ளம்

பத்துமாதம் சுமந்து பெற்று
பகலிரவாய் எமைக்காத்து
முத்து மக்கள் என்றெம்மை
சொத்தாக எமை வளர்த்து
பாலூட்டிச் சீராட்டி
பக்குவமாய் எமைக்காத்து
சீராட்டித் தாலாட்டி
தாயே நீ எமை வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட துன்பம் நாம் மறவோம்
பார்வாழ்வில் நாம் மறவோம்
உற்றதுணை யாரெமக்கு
உரிமைத் தாய் யாரெமக்கு
திருமணமும் செய்து வைத்து
சீர் சிறப்பும் நீபார்த்து
கருமங்கள் முடிந்ததென்று
கண்ணயர்ந்து போனாயோ
அப்பா அரற்றியழ
அனைவரும் தான் சேர்ந்து அழ
தப்பாகிப் போனதம்மா
எங்கள் தலை விதியோ
நீயில்லா எம் வீடு
எங்களுக்கோ பெருங்காடு
தாயில்லா எங்களுக்கு
எம்வீடு சுடுகாடு
மீண்டும் ஒரு பிறவியது
மண்ணகத்திலிருந்திட்டால்
மீண்டும் நீ வந்திடம்மா
எங்களுக்குத் தாயவளாய்.

## கூடப்பிறந்த சோதரர்களின் சோகக்குரல்கள்
## (ஆறுமுகம், செல்லத்துரை, நடராசா)

ஒருதாய் வயிற்றிற்பிறந்து ஒன்றாக நாம் மலர்ந்து
ஒருதட்டில் சோறுண்டு ஒற்றுமையாய் நாம் வளர்ந்து
பள்ளிக்கு நாமன்று ஒன்றாக நாம் சென்று
நெல்லிக்காய் பறிக்கவென நெடுந்தூரம் நாம் சென்று
கிளிக்கோடு விளையாடி கெந்தி விளையாடி
சலிக்காமல் ஊஞ்சலுடன் ராட்டினமும் சேர்ந்தாடி
குழப்படிகள் கூத்துக்கள் கும்மளமடித்தாடி
வழக்கமாய் நாம் வாங்கும் ஐயாவின் அடிவரிசை
எண்ண மனமேங்கிறது எம்முயிரே எம்முறவே
அண்ணாவும் தம்பிகளும் அழுகின்றோம் உடன்பிறவியே
கனவினிலே என்றாலும் காட்சி கொடு எங்களுக்கு
நினைவிலை வந்துவிடு நித்தமும் எங்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் உருகிடும் கண்ணீர்
## (தங்கராசா, நிர்மலா, கமலேஸ்வரி, குமுதாஞ்சனா, யோகலிங்கம், புஷ்பகுமார், வசந்தநாயகி)

அன்பான எம்மாமி ஆருயிரே எம்மாமி
பண்பான எம்மாமி பாசமுடை எம்மாமி
மாமி என நாமழைக்க மலர்ந்திடும் உம் முகமே
சாமியெங்கள் மாமியெனச் சொல்லிடுமே எம்மகமே
மனம்நோக வார்த்தையில்லை சிரிப்பைவிட வேறு இல்லை
இப்படியொரு மாமி எம்மவர்க்கு அமைந்ததிற்கு
எப்படித்தான் நன்றி சொல்வோம் உமைத்தந்த இறைவனுக்கு
விண்ணுலகு சென்றுவிட்ட பாசமிகு எம்மாமி
விண்ணுலகில் சாந்திகொள்ளச் சாமியை வேண்டுகின்றோம்

## பேரர்,பூட்டப்பிள்ளைகளின் ஆதங்கக் கண்ணீர்
## (பிறேம்குமார், பிரசன்னா, சங்கீதா, அனுந்திகா, யோகபாலினி, மைத்தூரன், தர்ஷனா, கீர்த்தனா, கிரிஷாந்-(வெளிநாடு), கார்த்திகா, வேணுகா, ஐசிந்தன், அஜந்தன், உதயகுமார், சுதேசினி, பிரியங்கன், குபேதினி, லக்சிகா, இதுரா, சாரா, ஜெயராம், சாயிராம், அனுராம்.

அப்பம்மா அம்மம்மா எங்கு சென்றனையோ
எப்பம்மா இனிவருவாய் எங்கு நீ சென்றனையோ
கோயிலுக்குச் சென்றனையோ கொழும்புக்குச் சென்றனையோ
பழங்கதைகள் பாட்டுக்கள் இப்போது எமக்கில்லை
பழம்பாகு பலகாரம் பகிர்ந்துண்ண வழியுமில்லை
அன்புமொழியுடனே அறுசுவை உணவில்லை
பண்புமொழிபேசி பகிடிவிட யாருமில்லை
உண்ணாமல் உறங்காமல் உழல்கின்றோம் அம்மம்மா
எண்ணாமலிருக்க முடியவில்லை அப்பம்மா
எங்கே நீபோனாலும் எங்களிடம் வந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நாம் பார்த்திருப்போம் பறந்தோடி வந்துவிடு
சொக்காவும் வேண்டாம் நீவிரைந்தோடி வந்துவிடு
கக்கா அம்மா எனச் சொல்லமுந்தி வந்துவிடு
பார்த்திருப்போம் படலையில் பம்பரமாய் வந்துவிடு
காத்திருப்போம் கார்பிடித்துக் கடுகதியாய் வந்துவிடு.

## மைத்துன மைத்துனிகள்
## (வேலுப்பிள்ளை,தெய்வானைப்பிள்ளை) புலம்பல்

மாசற்ற மைத்துனியே மாண்புடைய பேரொளியே
நேசமுடை நெடுமரமே போனீரே தனிவழியே
நீரில்லா உம்வீடு ஒளியில்லாச் சுடுகாடு
நீரில்லா உறவுகளோ நித்தமும் படும்பாடு
சொல்ல முடியவில்லை சோம்பியழ முடியவில்லை
நல்ல எங்கள் மைத்துனியே உமைமறக்க முடியவில்லை
சிவனுலகு சென்ற எங்கள் சிந்தைகவர் மைத்துனியே
அவனுலகில் சாந்திபெறும் அஞ்சலித்தோம் சாந்திபெறும்.

## உற்றார் உறவினர் ஊரவர் அயலவர் நண்பர்களின்
## கவலைக்குரல்கள்.

நிலவொன்று மறைந்ததுவோ நீள்தூரம் போனதுவோ
நலம் தந்த ஒளியொன்றுஓடி ஒளிந்து போனதுவோ!
மலரொன்று மணமிழந்து மகிமையின்றிப் போயினதோ
வலதுகை முறிந்ததுவோ பலமிழந்து ஆனதுவோ
குலவிளக்கு ஒன்றின்று குலைந்தலைந்து அணைந்ததுவோ
இராசமே எம்முறவே எம்மூரின் நாயகியே!
பாசமுடன் நாமிணைந்து அஞ்சலித்தோம் ஆறுதல் கொள்.

ஆக்கம் :-
**மிருசுவில் தமிழ்த்தாசன்**
**பன்றிக்கேணி வீதி,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடப்பத்து

01. ஓம் பூரணனே பதினாறு திங்கள் சேரும் பொருந்தியே யருக்கண்
பதினெட்டுச் சேரும்
காரணனே! கருமுகில் போல் மேனிசேரும் கருணை பேரு
மஸ்டாட்சங்கலந்து வாழும்
வாரணனே லட்சுமியோ டெட்டுஞ் சேரும் மதிமுகம் போல்
நின்றிலங்கு மாயாநேயா
ஆரணனே ரகுராமா கெருடன் மீதில் அன்புடனே
ஏறிவந்தருள் செய்வாயே!

02. மந்திரமோ அஷ்டசித்து மெட்டுஞ்சேரும் வாழ்கிரக
மொன்பதுமே வந்து சேரும்
கந்தருவர் கணநாதராசி வர்க்கம் கலைக்கியான நூல்
வேதங்கலந்து வாழும் நந்தி முதல்
தேவர்களுங் கவனயோகம் நமஸ்கரித்துன்பாதம் நாளும்
போற்ற அந்தரமாய் நிறைந்
திருக்குங் கெருடன் மீதில் அன்புடனே
ஏறி வந்தருள் செய்வாயே!

03. மூலமுதலோரெழுத்து நீர் தானாகும் மூன்றெழுத்து
மைந்தெழுந்தும் மொழியாலாமோ சீலமுதல் ஓம்-அங்
உங்-மங் நீங்கென்றே சிவனுடைய திருநாமம் நீர்
தானாகும் காலமுதல்
ஓம்-அங்-உங்-மங்-நிங்கென்றே கருணை
பெருமிவ்வெழுத்து நீர்தானாகும். ஆலவிலிசகையேந்துங்
கெருடன் மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்வாயே!

04. நவ்வென்றும் கிலியென்றும் ஓம் சிவாயமென்றும் நமநம சிவசிவ
ராரா என்றும் சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமித் தவமுடை
விவ்வெழுத்தும் நீர் தானாகம் ஒவ்வொன்றும் ஓம் நமோ
நாராயணா என்று உன்பாத முச்சரித்து கந்து போற்ற
அவ்வென்று ரகுராமா கெருடன் மீதில் அன்புடனே
ஏறிவந்தருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. உதிக்கின்ற சிவசொருப முனக்கேயாகும் ஓம் அவ்வும்
உவ்வுங்கிலியுமென்றே பதிக்கிசைந்த ஐந்தெழுத்தை
வெளியில் வீட்டே பச்சை முகில் மேனியனே பணிந்தேன்
உன்னை வீதிக்கிசைந்த மெய்ப் பொருளே
அரிகோவிந்தா விளக்கொளிபோல் மெய்த்தவமே
விரம்பித்தாதா அதற்கிசைந்த நடம்புரியுங்
கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!

06. வேதமுதலாயிருந்த சிங்கரூபம் விளங்குகின்ற விரணியனே
வதையே செய்தாய் பூதமுதலாம் பிறவும் புண்ணிய
நேரய புகழ்ந்தவர்க்குத் துணைவருவாய் யசோதை
புத்ராநாதல் விந்து வாயிருக்கெல்லாம் நயம் பெறவே
நிறைந்திருக்கும் வரதபிரம யாதவன்போல் நிறைந்திருக்கும்
கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!

07. முக்கோண நாற்கோண மொழிந்தைங் கோண முச்சுடரே
யறுகோமென் கோணமாகும் சட்கோண நாற்பத்து
மூன்றுகோண தந்திரமுஞ்சிதம் பரமுஞ்சகல சித்தும்
இக்கோணமீது முதலாய் வகாரமுட்டும் இறைவனாய்த்
தானிருந்து ரட்சித்தாளும் அக்கோண மீதிருந்து
கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!

08. பச்சை முகில் மேனியனே உனக்கு இந்தப்பார்தனில்
பத்தவதாரமண்டு மச்சமென்றும் கூர்மென்றும்
வராகமென்றும் வாமமென்றும் ராமமென்றும் பவுத்தன் என்றும்
துஷ்டரையடக்க மோகினி வேடங் கொண்டதாய்த்
தோன்றினாயுன் சொருபமெல்லாம் அறிவாருண்டோ அச்சந்
தீர்த்தெனையாளக் கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள்
செய்வாயே!

09. வேதியனாய்த் தோன்றி வந்தாய் மாடலிக்கு விண்ணவர்க்காய்
நரசிங்கரூபமானமாய்ச் சாதியிலே யாதவனாய்
கிருஷ்ணனாகத் தானுதித்து வந்திருந்தாய் தரணி வாழ்க
சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போர் தம்மைத்
துஷ்டரையும் வதைசெய்து லோகமாள்வாய் ஆதிமுத
லோறெழுத்தே நீ கெருடன் மீதில் அன்புடனே
ஏறி வந்தருள் செய்வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மாயவனே ரகுராமா அருகே வாவா வஞ்சனைகள்
பறந்தோடநெஞ்சில் வாவா காயாபூ நிறமுடனே
கனவில் வாவா கருமுகில் மேனியனே என் கருத்தில் வாவா
நாயகனே யென்னாவிருக்க வாவா நாள்தோறு
முன்பாகத் துதிக்க வாவா ஆயர் குலத்துதித்தவனே கெருடன்
மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!

11. முப்புரத்தை யெரித்தவனே இப்போ வாவாமுகில் நறனே
ஜகநாதா முன்னே வாவா எப்பொழுதும் துதிப்பவர்
பங்கில் வாவா ஏழைப்பங்கிலிருப்பவனே இறங்கி வாவா
ஒப்பிலாமணி விளக்கே யொளிபோல் வாவா
ஓம்நமோ நாராயணாவுகந்து வா அப்பனே ரகுராமா
கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!

12. துளபமணி மார்பழகா சுகத்தை தாதா சுருதியே மெய்ப்
பொருளே வரதத்தைத் தாதா களபகஸ்தூரியனே
கடாட்சந் தாதா கஞ்சனை முன்வென்றவனே கருணை
தாதாபரம் பொருளே சிவஜோதி பாக்கியந் தாதா
பக்திமுத்தி செய்யவுன் பாதந்தாதா அளவிலா மெய்ப்
பொருளே கெருடன் மீதில் அன்புடனே ஏறி வந்தருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 □ 10 □ 1934 | 04 □ 10 □ 2012 |

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த முன்னாள் துணுக்காய் தபாலகர், மற்றும் முதியோர் சங்கத் தலைவர், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமாகிய திரு.வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியாகிய

## அமரர். இராசலட்சுமி வைத்திலிங்கம் அவர்கள்

நிலையற்ற வாழ்வுதனில்
நிலைத்துவிட்ட உத்தமியே!
நினைவிழக்க முடியாமல்
நிக்கிறோமே நிழலின்றி!
நித்தம் உந்தன் நினைவோடு
நீ நடந்த கால்த்தடங்கள்!
கண்ணீரில் மூழ்குதம்மா
நினைப்பொழிய மாட்டாதம்மா!....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் துயரில் வாடும் குடும்பத்தினர் மற்றும் அனைவரது அனுதாபங்களுடன்

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
07.10.2012

கிராம அபிவிருத்திச்சங்கம்,
முதியோர்சங்கம்,
சனசமூக நிலையம்.

நிலா அச்சமைப்பு, வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.0777605033



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 25 * 10 * 1934 | | 04 * 10 * 2012 |



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த
திரு.வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியாகிய

## அமரர். இராசலட்சுமி வைத்திலிங்கம் அவர்கள்

வயல்காட்டுத் தென்றல் வந்து
தாலாட்டிச் செல்லும்
வெள்ளாம் போக்கட்டி ஊரதனில்
கரம்பிடித்த கணவனையும்
கண்களெனப் பெற்றெடுத்துப்
புகழ் சேர்த்த பிள்ளைகளையும்
கண்ணெதிரில் விட்டுவிட்டுக்
காணாத்தூரம் சென்றதெங்கே
நீ வாழ்ந்த சோலைவனம் பாலைவனமானதென்ன
விண்ணதிரும் கண்ணீரில் உறவுகளோ அழுவதென்ன!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் துயரில் வாடும்
அனைவரது அனுதாபங்களுடன்

திரு.வேதவனம் திருச்சிற்றம்பலம் (சித்தா)
திருமதி. திருநாவுக்கரசு சரஸ்வதி
குடும்பத்தினர்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
07.10.2012

நிலா அச்சமைப்பு, வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.0777605033



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்



மலர்வு
1934.10.21

உதிர்வு
2012.10.04

வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைச் சேர்ந்த எமது அருமை மாணவ நண்பன்
பு.பிரியங்கன் அவர்களின் அன்பு பேத்தியார்

## திருமதி. வைத்திலிங்கம் இராசலட்சுமி

பாசமுடன் பவனி வந்து
பண்புடனே அரவணைத்து
தீரமுடன் வாழ்ந்துயர்ந்த
மூதாட்டித் தாயேயுன்
பிள்ளைகளும் பேரர்களும்
தவித்தலர வைத்துவிட்டு
ஈசனவன் பாதமதை
இயல்புறவே நாடிவிட்டாய்
அங்கமைதி கண்டினிதே
அவன்பணி நீபுரிய
இங்கிருந்து அவன்பாதம்
இறைஞ்சுவோம் நிச்சயமாய்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**2010 உயர்தர.**

**வர்த்தகப்பிரிவு மாணவர்கள்**

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ARS சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மண்மகிழ
. 21.
10
1934



கண்நெகிழ
04
10
2012

எமது சக நண்பன் பிரியங்கனின் பாசமிகு அம்மம்மாவும்
மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட

## திருமதி.வைத்தியலிங்கம் இராசலட்சுமி

அவர்களின் மறைவு குறித்த கண்ணீர் அஞ்சலிகள்

எம் அன்பு நண்பனின் பேத்தியாய் ~ மட்டுமன்றி
எமக்கும் அன்பு பேத்தியாய் வாழ்ந்தவரே
இப்பாரினிலே தம் வாழ்வு முடிந்ததென்று கேட்டபோது
பதறியது எம்உள்ளம்,துடித்ததே எம் இதயம்
பரிதவிக்கும்எம்மை இனி பார்க்கவும் பாசம் காட்டவும்
இப்பாரினிலே தாம் பிறந்து வர பார்ப்பீரோ
எம் அன்புப் பேர்த்தியாரே உங்கள் ஆத்மா சாந்தி
பெற வேண்டுகின்றோம் இறைவனை நாம்.

ஓம் சாந்தி !!! சாந்தி !! சாந்தி !

நண்பர்கள்
கச்சாய்,வகையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

மண்ணில் 25 * 10 * 1934



விண்ணில் 04 * 10 * 2012

வெள்ளாம்போக்கட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவராகிய திருமதி.புஸ்பகுமார் பகவதி (முன்னாள் மா.கி.அ.சங்கத் தலைவி), திருமதி.யோகலிங்கம் திலகவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி. பாலகிருபா கார்த்திகா (மா.கி.அ.சங்கச் செயலாளர்), செல்வி. புஸ்பகுமார் சுதேசினி ஆகியோரின் பேத்தியாருமாகிய

## அமரர். இராசலட்சுமி வைத்திலிங்கம் அவர்கள்

அம்மா என்ற மேருமலை
    அரவணைப்பை மறந்ததென்ன
ஆனந்த வாழ்வுதனை
    ஆலம் விழுதாக்கிச் சென்றாய்
இனிய தெய்வம் இலட்சுமியே
    இனியெப்போது காண்போம்
ஈரவிழி கலைகிறதே
    ஈரல்குலை பதைக்கிறதே
உத்தமியே உன்னைப்போல்
    உத்தமியை இனி எங்கு காண்போம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் துயரில் வாடும் அனைவரது அனுதாபங்களுடன்

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
07.10.2012

வெள்ளாம்போக்கட்டி மாதர்
கிராம அபிவிருத்திச் சங்கம்.

நிலா அச்சமைப்பு, வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.0777605033



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் | விண்ணில்
---|---
25 * 10 * 1934 | 04 * 10 * 2012



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த
திரு.வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியாகிய

## அமரர். இராசலட்சுமி வைத்திலிங்கம் அவர்கள்

கனவே கலையாதே
முகத்தைக் கலைக்காதே
நினைவே அழியாதே
நினைவுகளை அழிக்காதே
நீண்டவழிப் பாதைதனில்
நீங்காவுன் வாழ்க்கைதனை
விக்கி விம்மி நாம் நினைத்து
நிக்கிறமே கண்ணீரில்
நேற்றுவரை நீயிருந்து
கோலமிட்ட சோலைவிட்டு
காலனிட்ட கட்டளைக்கு
சட்டென்று போனதென்ன!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் துயரில் வாடும் குடும்பத்தினர் அனைவரது
அனுதாபங்களுடன்

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
07.10.2012

விவசாய சம்மேளனம்,
வெள்ளாம்போக்கட்டி மக்கள்.

நிலா அச்சமைப்பு, வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.0777605033




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுத்துங்கள்




முன்னே வாருங்கள்



முன்னாலும் பின்னுமிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்



முன்னே வாருங்கள்



பின்னாலிருந்து வரும்
வாகனங்களை நிறுத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாய எச்சரிக்கைச் சைகைகள்



1
முன்னால் இடப்
பக்க வளைவு



2
முன்னால் வலப்
பக்க வளைவு



3
முன்னால் இடப்
பக்கமாக
இரட்டைவளைவு



4
முன்னால் வலப்
பக்கமாக
இரட்டைவளைவு




5
முன்னால் வலப்
பக்கமாக கொண்டை
ஊசி வளைவு



6
முன்னால் இடப்
பக்கமாக கொண்டை
ஊசி வளைவு



7
இரட்டை வண்டிப்
பாதை முன்னால்
முடிவடைகிறது




8
வீதி முன்னால்
ஒடுக்குகிறது




9
முன்னால் குறுக்கு
வீதிகள்



10
முதலாவது பக்கவீதியை
இடப் பக்கமாகக் கொண்டு
அடுத்தடுத்து வரும் சந்தி



11
முதலாவது பக்க வீதியை
வலப்பக்கமாகக்
கொண்டு அடுத்தடுத்து
வரும் சந்தி



12
"T" சந்தி
முன்னால்



13
மூன்று வீதிகளின்
சந்தி முன்னால்



14
இடமிருந்து வரும்
வாகனம் முன்னால்
இணைகிறது



15
வலமிருந்து வரும்
வாகனம் முன்னால்
இணைகிறது



16
ஒடுக்கமான பாலம்
முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17
முன்னால்
நிறுத்தவும்



18
முன்னால் வழி
விடவும்



19
முன்னால் சுற்று
வளைவு



20
முன்னால் ஒளிச்
சமிக்ஞைகள்



21
அபாயகரமான
சரிவு முன்னால்



22
அபாயகரமான
ஏற்றம் முன்னால்



23
வழுக்கும் வீதி
முன்னால்



24
முன்னால் கற்
பாறைகள் விழும்




25
முன்னால் பாதசாரிகள்
கடவை



26
முன்னால் சிறுவர்
கடவை




27
முன்னால் பாதை
வேலை



28
பாதுகாப்புடைய புகை
யிரதக் கடவை
முன்னால்



29
பாதுகாப்பற்ற புகை
யிரதக் கடவை
முன்னால்



30
வசுவண்டி ஒழுங்கை
முன்னால்



31
துவிச்சக்கர வண்டி
ஒழுங்கை முன்னால்



32
துவிச்சக்கர வண்டிக்
கடவை முன்னால்



33
மந்தை அல்லது வேறு
விலங்கு முன்னால்
பாதையைக் கடக்கக்
கூடும்.



34
ஓடத்துறை
ஒன்றிலுள்ள
வீதி முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்குபடுத்தும் சைகைகள்

## தடைசெய்யும் சைகைகள்


35
[illegible] செல்லத் தடை


36
இடப்பக்கம் திரும்பத் தடை


37
வலப்பக்கம் திரும்பத் தடை


38
'U' முடக்குத் திரும்பத் தடை


39
முந்திச் செல்லத் தடை


40
ஒலி எழுப்பத் தடை


41
சகல வாகனங் களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது


42
பஸ் வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


43
லொறிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


44
மோட்டார் வாகனங் களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


45
வாகனங்கள் நிறுத்தக் கூடாது


46
வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது



47
ஒற்றை நாட்களில் வாகனங்கள் நிறுத் தக் கூடாது


48
இரட்டை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிகச் சட்டங்கள்




49




50



51



52



53

## மட்டுப்படுத்தும் சைகைகள்




54

அகலத்தின் வரையறை




55

உயரத்தின் வரையறை




56

எடையின் வரையறை




57

ஓர் அச்சாணி மீது எடையின் வரையறை




58

வேகத்தின் வரையறை




59

வேகத்தின் வரையறை முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாயச் சைகைகள்



60

இடப் பக்கம் திரும்பவும்



61

வலப் பக்கம் திரும்பவும்



62

நேரே செல்லவும்



63

முன்னால் இடப் பக்கம் திரும்பவும்



64

முன்னால் வலப் பக்கம் திரும்பவும்



65

இந்தப் பக்கம் செல்லவும்



66

கட்டாயச் சுற்றுவட்டம்

## முந்துரிமைச் சைகைகள்



67

வழி விடவும்





68

நிறுத்துக




69

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை



70

முந்துரிமை வீதி



71

முந்துரிமை முடிவு



72

முன்னால் வரும் வாகனத்துக்கு முந்துரிமை



73

முன்னால் வரும் வாகனத்தின் மீது முந்துரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதிகளுக்குப் பயனுள்ள வேறு சைகைகள்



74

பாதசாரிகள் கடவை



75

ஒரு திசை வழி



76

ஆஸ்பத்திரி





77

வாகனம்
நிறுத்துமிடம்




78

பஸ்வண்டி
தரிப்பிடம்



79

பஸ்வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை
ஆரம்பம் / தொடர்ச்சி




80

பஸ்வண்டி மட்டும் செல்லும்
ஒழுங்கை முடிவு



81

துவிச்சக்கரவண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
ஆரம்பம்/தொடர்ச்சி




82

துவிச்சக்கரவண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதசாரிகள் கடவை




83

வரிகளினால் கட்டுப்படுத்தப்படும் இடைப்பாதையின் எல்லைகள்



84

போக்குவரத்துச் சமிக்ஞை
களில் அல்லது பொலிஸா
ல் கட்டுப்படுத்தப்படும் சந்திக்
கடவுகளில் நிறுத்தக்கோடு



85

நிறுத்துக் சைகையில்
நிறுத்தக் கோடு



86

'வழி விடவும்' கோடு



87

சுற்றுவட்டத்தில் வழி
விடவும் கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



88

நடுக்கோட்டு வரைகைக் குறியீடு



89

குமிழ்கள் (அல்லது பூனைக்கண்கள்) இணைந்த நடுக்கோடு



90

வலப்பக்கம் திரும்புவதற்குத் தவிர குறுக்கீட்டைத் தடை செய்யும் நெடுங்கோடு



91

குறுக்கீட்டைத் தடை செய்யும் நெடுங்கோடு.



92

ஒழுங்கைக் குறியீடு




93

வளைவொன்றில் வண்டிப் பாதையின் ஓரத்தைக் காட்டும் நெடுங்கோடு




94

வாகனங்கள் நிறுத்தப் படுவதைத் தடை செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் வண்டிப்பாதை ஓரத்தின் குறியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்து பகுதி



95

எதிர்த்திசையிலான
வாகனப்
போக்குவரத்து



96

ஒரே திசையிலான
வாகனப்
போக்குவரத்து




97

வாகனங்களுக்குக் கட்டாய
இடப்பக்கத்
திருப்புகையைக் காட்டுவதற்கு




98

வாகனங்கள்
கட்டாயமாக
நேராகச்
செல்ல வேண்டும்
என்பதனைக்
காட்டுவதற்கு




99

வாகனங்களுக்கு
வலப் பக்க
கட்டாயத் திரும்பு
கையைக் காட்டுவதற்



100

வாகனங்களுக்குத்
தோதான
ஒழுங்கைகளைக் காட்டுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




101

முன்னால் நிகழக்கூடிய
அபாயத்தைக் காட்டுவதற்கு




102

'நிறுத்துக' 68 சைகையையும்
என்ற கோட்டுப் படத்தில் தரப்பட்ட
வீதி அடையாளக்குறியீட்டையும் 85
கொண்ட வீதிச் சந்தியொன்று
எதிர்ப்படுவதைக் காட்டுவதற்கு.





103

வசுவண்டி ஒழுங்கை




104

துவிச்சக்கர வண்டி ஒழுங்கை




105



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




106

அபாய எச்சரிக்கைக் கோடு




107

லகுவண்டி அல்லது துவிச் சக்கரவண்டி ஒழுங்கை நிர்ணயம்



108

சந்திப் பெட்டி



109


சந்திப் பெட்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல்தரும் சைகைகள்


## முன்னரே நெறிப்படுத்தும் சைகைகள்




110





111




112

110க்கு மாற்று



113

வழியடைப் பலகை



114

(அம்புக்குறியானது வீதி மாறுபடும் திசையைக் காட்டும்)

மாற்று வழியடைப் பலகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசைகாட்டும் சைகைகள்




115

இடமும் தூரமும்




116


இடமும் வகையும்

## இடத்தைக் காட்டும் சைகைகள்




117

நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் ஆரம்பம்



118

நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் முடிவு

## உறுதிப்படுத்தும் சைகைகள்




119

தூரத்தை உறுதிப் படுத்துதல்

பாதசாரிகளுக்கு ஒளிச் சமிக்ஞைகள்



120

சிவப்பு நிற மனிதன்



121

பச்சை நிற மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிநவில்கின்றோம்

எமது பாசமிகு குடும்பத்தலைவியும், ஆருயிர்த்தாயாரும், அன்புச் சகோதரியும், மதிப்புமிகு மாமியாரும், ஆசைப்பேர்த்தியும், பாசமிகு மைத்துனியும், செல்லப்புட்டியுமான திருவாட்டி இராசலட்சுமி வைத்தியலிங்கம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடனடியாக எமதில்லம் நாடி ஓடி வந்து வேண்டிய உதவிகளைத் தாமாகவே செய்து உதவிய அன்பர்கள், மரணச்சடங்கில் கலந்து கொண்டோர், இறுதி யாத்திரையில் கலந்துகொண்டோர், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலித்துண்டுப்பிரசுரம் வெளியிட்டோர், தொலைபேசி மூலமும் நேரடியாகவும் ஆறுதல் பகின்றோருக்கும், மலர்வளையம் சாத்தியும் வேறுவழிகளில் உதவிகள் ஒத்துழைப்புக்கள் வழங்கிய அனைத்து நெஞ்சங்கட்கும், மற்றும் இறுதி நீர்க்கடன் சபிண்டீகரணக் கிரியைகளிற் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிற் பங்கு கொண்ட அனைவருக்கும் மேற்படி கிரியைகளை நெறிதவறாது நடாத்தி முடித்த அந்தண சிவாச்சரியர்கட்கும் இந்நினைவுமலரை மிகச்சிறப்பாக இயற்றித்தந்த மிருசுவில் தமிழ்த்தாசன் அவர்கட்கும் இதனை மிக அழகாக அச்சேற்றித்தந்த சிவகஜன் அச்சகத்தினருக்கும் எமது கோடான கோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
03.11.2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விரு

சோமசுந்தரம் (அமரர்) + சேதுப்பிள்ளை (அமரர்)

வைத்திலிங்கம் - வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை

கலாவதி
+
தங்கராசா
பிறேம்குமார்
பிரசன்னா

கேந்திரபாலன்
+
நிர்மலா
சங்கீதா
அனுந்திகா

யோகபாலன்
+(அமரர்)
கமலேஸ்வரி
யோபாலினி
+
சுபாஸ்கரன்
லக்சிகா
யதுரா
சாரா

சிவபாலன்
+
குமுதாஞ்சனா
மைத்தூரன்
தர்சனா

திலகவதி
+
யோகலிங்

1. கார்த்தி
+
பாலகிருப
ஜெயராம்
சாயிராம்
அனுராம்

2. வேணு
3. யசிந்த
4. அஜந்த
5. மருதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...விருட்சம்

வல்லிபுரம் (அமரர்) + முத்துப்பிள்ளை (அமரர்)

↓

ஆறுமுகம் - **இராசலட்சுமி** - அருணாசலம் (அமரர்) - செல்லத்துரை - நடராசா

↓

- திலகவதி + யோகலிங்கம்
  - ↓
  - 1. கார்த்திகா + பாலகிருபா
    - ↓
    - ஜெயராம்
    - சாயிராம்
    - அனுராம்
  - 2. வேணுகா
  - 3. யசிந்தன்
  - 4. அஜந்தன்
  - 5. மருதிகா
- குகபாலன் (அமரர்)
- பகவதி + புஸ்பகுமார்
  - ↓
  - உதயகுமார்
  - சுதேசினி
  - பிரியங்கன்
  - குபேதினி
- ஜெயபாலன் + வசந்தநாயகி
  - ↓
  - கீர்த்தனா
  - கிரிசாந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம்.

Sivaranjanam 708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org